DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, KARUR

C.C. No. 50/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : சந்ரு

Father's Name : சண்முகம்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.07.2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணிமலையில் குடியிருந்துகொண்டு ஆப்டிகல்ஸ்சில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 12.11.2021 அன்று இரவு 08.00 மணியளவில் சம்பவ இடத்தில் நான் நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது லலிதா மற்றும் ராமசந்திரன் என்பவர்களின் வீட்டிற்கு முன்னால் வரும்போது நீ என்ன என்னுடைய அப்பனுக்கு பிறந்தவனாடா என்று

சத்தம் கேட்டது. நான் அருகில் சென்று பார்த்தபோது, ராமசந்திரன் லலிதா குடும்பத்தினருக்கும், வாசு என்பவர் குடும்பத்தினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. வாசு என்பவரின் காலில் அடிபட்டிருந்தது. அவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் அவர்களை சமாதானம் செய்துவிட்டு, வீட்டிற்கு சென்றுவிட்டேன். அடுத்த நாள் காலை வாசுவின் வீட்டிற்கு கீழே உள்ள சலூன் கடைக்கு நான் சென்றேன். அப்போது ராமசந்திரனின் மகன்களும் ஊரில் உள்ள சிலரும் சேர்ந்து அருவாளை எடுத்துக் கொண்டு என்னைக்கா இருந்தாலும் உங்களை வெட்டாமல் விடமாட்டேன் என்று வாசுவின் வீட்டைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நானும், வாசுவும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். நான் வேலை செய்யும் கரூர் ஆப்டிகல்ஸ் நிறுவனத்தில் வாசு வேலை பார்த்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் இரவு 08.00 மணிக்கு சென்றேன். நான் வேலை செய்யும் ஆப்டிகல்ஸ் கரூர் கோவை ரோட்டில் உள்ளது. எனது வீட்டிலிருந்து நான் வேலை செய்யும் ஆப்டிகல்ஸ் சுமார் 7 கி.மீ. தொலைவு இருக்கும். தினமும் எனது பைக்கில்தான் செல்வேன். காலை 09.30 மணிக்கு வேலைக்கு செல்வேன். காலையில் 09.30 மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பி வேலைக்கு செல்வேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி வாசுவிற்கு காலில் அடிபட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற விவரத்தை போலிசார் விாசரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. ராமசந்திரனின் மகன்கள் அரிவாளை வைத்து மிரட்டியதை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். ஆனால் போலிசார் விசாரணையில் மேற்படி

ராமசந்திரனின் மகன்கள் அரிவாளை வைத்து மிரட்டியதாக கேள்விபட்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசியபோது நான் எங்கே நின்றுகொண்டிருந்தேன் என்றால் ராமசந்திரனின் கறிக்கடை அருகே நின்றுகொண்டிருந்தேன். ராமசந்திரன் வைத்திருப்பது மளிகைக்கடையா, கறிக்கடையா என்றால் இரண்டுமே வைத்துள்ளார். ஆஜர் எதிரி ராமசந்திரன் வீடும், ராமசந்திரனின் கறிக்கடையும் முன்பும், பின்பும்தான் உள்ளது. ஆஜர் எதிரி ராமசந்திரன் வாசுவை திட்டியதாக சொல்லப்படும் இடமானது ராமசந்திரனின் கடைக்கு வெளியே என்றால் சரிதான். நான் வாசுவின் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரத்தில் காலில் அடிபட்ட வாசுவை அச்சமயமே நாச்சிமுத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 முதல் விசாரணையில் சம்பவத்திற்கு அடுத்த நாள் நாச்சிமுத்து மருத்துவமனைக்கு சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக் கொடுத்தது போல பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விாசரணையிலும் முதல் விாசரணையிலும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE SPECIAL MAGISTRATE, KARUR

C.C. No. 50/2025

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பாரதி |
| Father's Name | : | தங்கராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.07.2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணிமலையில் குடியிருந்துகொண்டு ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். வாசு எனது சிறு வயதிலிருந்தே நண்பர் ஆவார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாக தகவல் கேள்விபட்டு மருத்துவமனைக்கு சென்று பார்க்க இயலாததால் கடந்த 18.11.2021 அன்று இரவு சுமார் 07.00 லிருந்து 08.00 மணிக்குள்

வாசு என்பவரின் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது போலிசார் நடந்த சம்பவம் குறித்து விசாரித்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் என்னை சாட்சியாக இருக்கும்படி சொன்னார்கள். அதன்படி நானும் சம்மதித்து என் முன்னிலையில் போலிசார் பார்வை மகசர் மற்றும்மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில் )**

அ.சா.2 வாசுவும் நானும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். அ.சா.2 வாசுவும் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இருந்தேன். 15.11.2021 அன்று எனக்கு திருமணம் நடைபெற்றது. அ.சா.2 வாசுவும் நானும் நெருங்கிய நண்பர்கள் என்பதாலும், போலிசார் கேட்டுக்கொண்டதாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**